செயல்படுவதற்கு எங்களுக்கெல்லாம் ஊக்கம் அளித்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

குடமுழுக்கு

***15196—திரு. K.A. பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கொத்தட்டை ஊராட்சியில் உள்ள அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற கூத்தாண்டவர் திருக்கோயிலில், 18.20 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 45 சதவிகிதப் பணிகள் முடிவுற்றிருக்கின்றன. வருகின்ற மே அல்லது ஜூன் மாதத்திற்குள் மீதமிருக்கின்ற பணிகளும் முடிவுற்று, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற குடமுழுக்கிற்கு இணையாக, திராவிட மாடல் ஆட்சியில், இந்த ஆட்சி

2024 பிப்ரவரி 14]
பொறுப்பேற்ற பிறகு, 1,378 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆண்டு காலம் நல்லாட்சி தந்து, சூழ்ச்சிகளை வீழ்த்தி, எதிரிகளை வேரறுத்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்—சாதாரண தொண்டன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு வரலாம் என்கிற விதிக்கு உயிர் கொடுத்திருக்கின்ற உன்னதமான தலைவர், இரும்பு தேசத்தின் கரும்பு மனிதர், சிலுவம்பாளையம் ஈன்றெடுத்த செந்தமிழ் நாயகர், எங்களுடைய வணக்கத்திற்குரிய அருமை அண்ணன், திரு. எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கொத்தட்டை ஊராட்சியில் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டது கூத்தாண்டவர் திருக்கோயில். மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்கள் வெற்றி பெற பலியிடப்பட்ட நல்லரவான் இவ்விடத்தில் மோகினி அவதாரத்தில் காட்சியளித்திருக்கிறார். இத்திருக்கோயிலில் வேறு எங்கும் இல்லாத வகையில், மூலவர் நல்லரவான் அருகில் அவரது தாயாரான நாகக்கன்னி அம்மையாரும் அமர்ந்துள்ளார்கள். ஒவ்வோராண்டும், இத்திருக்கோயில் திருவிழாவானது, மகாபாரதக் கதையில் உள்ளது போன்று வைகாசி மாதத்தில் 18 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், மூன்றாம் பாலினத்தவர்கள் ஒன்றுகூடி, திருவிழாவினை சிறப்பிப்பார்கள். இத்திருக்கோயிலில் 2010 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போது அதன் திருப்பணிகள், நன்கொடையாளர்கள் மூலமாகவும் நடைபெற்று வருகின்றன. தற்போது, அத்திருக்கோயிலில் மூலவர் சன்னதி புனரமைக்கப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இத்திருக்கோயில் பண்டைய அரசர்களின் கட்டடக் கலைக்குப் புராதன எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது. எனவே, இத்திருக்கோயிலை பழமை மாறாமல் புதுப்பிக்க சிறப்பு நிதியை ஒதுக்கித் தந்து, புனரமைப்புப் பணிகளை முடித்து விரைவில் கும்பாபிஷேகத் திருவிழாவினை நடத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே, அந்தத் திருக்கோயிலின் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.18,20,000/- செலவில் 45 சதவிகிதப் பணிகள் முடிவுற்றிருக்கின்றன என்பதை எனது பதிலுரையில் தெரிவித்திருந்தேன். மே அல்லது ஜூன் மாதத்திற்குள் இப்பணிகள் நிறைவுபெற்று, குடமுழுக்கு நடைபெறும் என்பதை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியின் மேற்கு பகுதியில், சிவபுரி கிராமத்தில் தேவாரப் பாடல் பாடப்பெற்ற சிவத் தலமான சிவபுரி உச்சிநாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்தலம், அகத்திய மாமுனிவருக்கு சிவபெருமான் காட்சியளித்த திருத்தலமாக உள்ளது. இத்திருக்கோயிலில், திருஞானசம்பந்தர் அவர்களுடன் 63 சிவனடியார்களும் உச்சிக்காலத்தில் இத்திருக்கோயிலுக்கு பசியோடு வந்தபோது, பசியோடு வந்த அந்த அடியார்களுக்கு, இறைவன், கோயில் பணியாளர் வடிவில்*

2024 பிப்ரவரி 14]

வந்து உணவளித்ததால், உச்சிநாதர் என்ற பெயர் பெற்றவராக விளங்குகிறார். இத்திருக்கோயிலில் கடந்த 2008 ஆம் ஆண்டில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. ஏறக்குறைய 16 ஆண்டுகள் கடந்துவிட்டதால், அக்கோயிலில் குடமுழுக்கு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி அண்ணாமலை நகர், திருவேட்களம் பகுதியில் திருஞானசம்பந்தர் அவர்களால் தேவாரப் பாடலில் பாடப்பெற்ற அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் கவனியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 18 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி, வேலை 40 சதவிகிதம் முடித்துவிட்டதாகச் சொன்னார்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *இது முதல் கோயில். நீங்கள் சொல்வது இதற்கு முன்பு உள்ள கோயில். அது கூத்தாண்டவர் கோயில். இது வேறு கோயில். பிரகதீஸ்வரர் தாயார் நல்லநாயகிபுரத்தில் சுயம்பு மூர்த்தி அருள்பாலித்து வருவது சிறப்பு அம்சமாகும். சம்பந்த பெருமான், இத்திருக்கோயிலிலிருந்து சிதம்பரம் நடராஜர் பெருமானை தரிசித்தார் என்ற வரலாற்றுப் பெருமை கொண்ட இந்தத் திருக்கோயிலுக்கு, 2006 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்று ஏறக்குறைய 18 ஆண்டுகள் முடிந்துள்ளன. எனவே, மேற்கண்ட கோயிலுக்கு குடமுழுக்கு செய்து, ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களில் எத்தனை கோயில்களில் திருப்பணிகள், புனரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய உச்சிநாதர் சுவாமி திருக்கோயில் குறித்த கருத்துரு மாநில*

தொல்லியல் வல்லுநர் குழுவிற்கு வருகின்ற 20 ஆம் தேதி சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. தொல்லியல் வல்லுநர் குழுவினுடைய அனுமதி பெற்றவுடன், அதற்குண்டான estimate தயார் செய்யப்பட்டு, tender கோரப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அந்தக் கோயிலினுடைய திருப்பணிகளை தொடர்வதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்வோம்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களில், எத்தனை திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று கேள்வி கேட்டார். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 2022–2023 மற்றும் 2023–2024 ஆகிய 2 ஆண்டுகளில் 200 கோடி ரூபாயை இதுவரையில் எந்த அரசும் செய்யாத அளவிற்கு அரசின் மானியமாக வழங்கியிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 200 கோடி ரூபாயோடு சேர்த்து 106 கோடி ரூபாய் திருக்கோயிலின் சார்பிலும், உபயதாரர் நிதியின் சார்பிலும் என மொத்தம் 306 கோடி ரூபாய் செலவில், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட 197 திருக்கோயில்கள் திருப்பணிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 26 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான தகவலையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அவர் கோரிய சிதம்பரம் திருக்கோயிலிலும் இந்த ஆண்டு இறுதிக்குள், திருப்பணிகள் தொடங்குவதற்குண்டான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.